அடுத்து, உறுப்பினர் solar power பற்றிச் சொன்னார்கள். தமிழகத்தில்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் முதன்முதலில் Solar Policy-யை வெளியிட்டு, மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். சூரியசக்தி மின்சாரத்தின் கொள்முதல் விலை என்ன என்பதை TNERC- தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்தான் நிர்ணயம் செய்ய வேண்டும். ஒரு யூனிட்டுக்கு 3 ரூபாய் 04 பைசா என்ற rate-ஐ அது நிர்ணயித்திருக்கிறது. அந்த rate மிகவும் குறைவாக இருப்பதால், அந்த rate கட்டுப்படியாகாது என்று சொல்லி solar power plant அமைப்பதற்குத் தயங்குகிறார்கள். அதுதான் காரணம். மேலும், net meter பொருத்துவதைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த வாரத்தில் புதிய Solar Policy-ஐ வெளியிட்டிருக்கிறார்கள். Net feed-in என்ற ஒரு system-ஐ நாம் இப்போது கொண்டுவந்திருக்கின்றோம். அந்த system-ஐ அமல்படுத்தும்போது தேவையான அனைத்து வீடுகளுக்கும் net meter கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

73—

சமுதாயக் கூடம்

***4916—திரு. அ. மனோகரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியம், சுப்புலாபுரம் ஊராட்சி, சங்கரலிங்காபுரம் கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2019 பிப்ரவரி 14]

(அ) மற்றும் (ஆ) வாசுதேவநல்லூர் தொகுதி, சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியம், சுப்புலாபுரம் ஊராட்சி, சங்கரலிங்காபுரம் கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்கள்.*

திரு. அ. மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசை நல்ல வழியிலே நடத்திச் சென்றுகொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில், சுப்புலாபுரம் ஊராட்சி என்று வினாவில் இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை வயலி ஊராட்சி என்று திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேற்குறிப்பிட்ட பகுதி மக்களுடைய நீண்ட நெடுநாள் கோரிக்கைக்கு 'சமுதாயக் கூடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்று அந்தத் தொகுதி மக்களுக்கு பெரும் சந்தோஷத்தை ஏற்படுத்துகின்ற வகையில் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். தொகுதி மக்களுடைய சார்பாகவும், எனது சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லிவிட்டீர்களா? வேறு கேள்வி இருக்கின்றதா?*

திரு. அ. மனோகரன்: *நன்றி சொல்லிவிட்டேன், வேறு கேள்வி இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

[2019 பிப்ரவரி 14

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவருக்கு வணக்கம் சொல்லிக்கொள்கிறேன். ஒவ்வோர் ஊராட்சியிலும் 'சேவை மையம்' என்ற ஒரு கட்டடம் மத்திய அரசின் உதவியுடன் கட்டப்பட்டிருக்கிறது. அத்தனை சேவை மையங்களும் எதற்காகக் கட்டப்பட்டன, எந்த சேவையைச் செய்வதற்காகக் கட்டப்பட்டன என்பது வரையறுக்கப்படாமல் இருக்கிற காரணத்தினால் அவை பூட்டிக் கிடக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திற்கும் போகும்போது பார்த்தால், சேவை மையங்கள் எல்லாம் திறக்கப்படாமல் பூட்டியே இருக்கின்றன. எதற்காக இந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டன, என்ன சேவை செய்வதற்காகக் கட்டப்பட்டன என்பதை நம்முடைய அரசு அறிந்து, முறையான அறிவிப்புகளை அறிவிக்குமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கட்டடங்கள் அனைத்து ஊராட்சிகளிலும் கட்டப்பட்டிருக்கின்றன. அனைத்துப் பிரிவுகளிலும், மின் கட்டணம், கேபிள் கட்டணம், குடிநீர் கட்டணம் போன்ற கட்டணங்கள் கட்டுதல் போன்ற சேவைகளுக்காக இ-சேவை மையம் என்ற வகையில் அந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டன. மத்திய அரசாங்கத்தின் நிதியிலிருந்து அந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டன. அதற்கு தொலை தொடர்புத் துறையும், தகவல் தொழில்நுட்பத் துறையும் தனியாக ஒரு process செய்திருக்கிறார்கள். ஆகவே, இரண்டு துறைகளும் கலந்தாலோசித்து கண்டிப்பாக அந்தக் கட்டடங்களைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. சில இடங்களில் அந்த ஊராட்சிகள் அந்தக் கட்டடங்களைப் பயன்படுத்துகின்றன. சில இடங்களில்தான் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. எல்லா இடங்களிலும் பயன்படுத்தப்படாமல் இல்லை. எனவே, பயன்படுத்தப்படாமல் இருக்கும் இடங்களிலும் அவற்றைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 பிப்ரவரி 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.*

திரு. பா. நீதிபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் காலங்களிலே மனித தெய்வமாக வாழ்ந்து, இன்றைக்கும் அனைவருடைய உள்ளங்களிலும், இல்லங்களிலும் கருணை தெய்வமாக வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். எங்கள் உசிலம்பட்டி தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான, உசிலம்பட்டி நகராட்சிக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 59 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்து, அதைச் செயல்படுத்துவதற்கு உத்தரவு வழங்கியிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்கள் சார்பிலே என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எங்களுடைய உசிலம்பட்டி நகராட்சி மக்களுடைய நீண்டகால எதிர்பார்ப்பான பாதாள சாக்கடைத் திட்டத்தையும் மிக விரைவில், இந்த ஆண்டிலேயே நிறைவேற்றித் தர நடவடிக்கை எடுக்கப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத துணைக் கேள்வியைக் கேட்டிருந்தாலும்கூட, தொகுதி மக்கள்மீதான அக்கறையின்பேரில் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வளர்ந்த நகரப் பகுதிகள், நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கண்டிப்பாகக் கொண்டு வரவேண்டுமென்ற நோக்கத்தோடு இத்திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். நிதிநிலைமை மற்றும் அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய சூழ்நிலைகளை அனுசரித்து, துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, இது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய*

கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

74—

கால்நடை மருத்துவமனை

801—திரு. சபா. ராசேந்திரன்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், பேர்பெரியான்குப்பம் ஊராட்சியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், பேர்பெரியான்குப்பம் ஊராட்சியில் 2017 ஆம் ஆண்டுவரை கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வந்தது. அரசாணை எண் 2, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள்: 4-1-2017-ன்படி, அந்தக் கால்நடை கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அரசு விதிகளின்படி, ஒரு கால்நடை மருந்தகத்தை, கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட, தினந்தோறும் சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும்மேல் இருத்தல் வேண்டும். உள் நோயாளிப் பிரிவு, ஊடுகதிர் கருவி நிறுவுதல் போன்ற வசதிகளை உருவாக்குவதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும். தற்போது இம்மருந்தகத்தில், தினமும் சுமார்